tnkalvi.online

No. of Printed Pages : **23**

5107

பதிவு எண்
Register Number

PART - III

கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90
Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது :

(அ) மேலாண்மைக் கணக்கியல் (ஆ) சமூகக் கணக்கியல்

(இ) பொறுப்பு கணக்கியல் (ஈ) காரியதரிசிகளின் கணக்கியல்

The root of financial accounting system is :

(a) Management Accounting (b) Social Accounting

(c) Responsibility Accounting (d) Stewardship Accounting

2. இறுதி சரக்கிருப்பு அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு :

(அ) முன்னெச்சரிக்கை மரபு (ஆ) முக்கியத்துவ மரபு

(இ) நிகழ்வு தீர்வு கருத்து (ஈ) பண மதிப்பீட்டுக் கருத்து

The rule of stock valuation "Cost price or realisable value" whichever is lower is based on the accounting principle of :

(a) Conservatism (b) Materiality

(c) Accrual (d) Money measurement

3. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து :

(அ) வணிகத் தனித்தன்மைக் கருத்து (ஆ) பணமதிப்பீட்டுக் கருத்து

(இ) இரட்டைத் தன்மைக் கருத்து (ஈ) அடக்கவிலைக் கருத்து

The business is liable to the proprietor of the business in respect of capital introduced by the person according to :

(a) Business Entity Concept (b) Money measurement Concept

(c) Dual aspect Concept (d) Cost Concept

4. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள் :

(அ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள்

(ஆ) விதிப்பிழைகள்

(இ) பகுதி விடு பிழைகள்

(ஈ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்

Errors not affecting the agreement of trial balance are :

(a) Errors of undercasting

(b) Errors of principle

(c) Errors of partial omission

(d) Errors of overcasting

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

5. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள் :

(அ) இருப்பு இன்மை (ஆ) வரவு இருப்பு

(இ) பற்றும் மற்றும் வரவு இருப்பு (ஈ) பற்று இருப்பு

If the total of the debit side of an account exceeds the total of its credit side, it means :

(a) Nil balance (b) Credit balance

(c) Debit and credit balance (d) Debit balance

6. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல் :

(அ) இருப்பாய்வு (ஆ) குறிப்பேடு

(இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) நாளேடு

A list which contains balances of accounts to know whether the debit and credit balances are matched is :

(a) Trial balance (b) Journal

(c) Balance sheet (d) Day book

7. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது :

(அ) குறிப்பேடு (ஆ) வியாபாரக் கணக்கு

(இ) இலாப நட்டக் கணக்கு (ஈ) இருப்பாய்வு

After the preparation of ledger, the next step is the preparation of :

(a) Journal (b) Trading account

(c) Profit and Loss account (d) Trial balance

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

8. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது :

(அ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்.

(ஆ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது.

(இ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை.

Purchase return book is used to record :

(a) returns of assets to the supplier for which cash is not received immediately.

(b) returns of assets to the supplier for which cash is received immediately.

(c) returns of goods to the supplier for which cash is not received immediately.

(d) none of the above.

9. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது ?

(அ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

(ஆ) அனைத்து சரக்குகளின் விற்பனை

(இ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

(ஈ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

Sales book is used to record :

(a) all credit sales of goods

(b) all sales of goods

(c) all sales of assets and goods

(d) all credit sales of assets

10. ரொக்க ஏடு ஒரு :

(அ) உரிய குறிப்பேடு

(ஆ) துணை ஏடு

(இ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

(ஈ) முதன்மை ஏடு

Cash book is a :

(a) Journal proper

(b) Subsidiary book

(c) Both Subsidiary book and Principal book

(d) Principal book

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது :

(அ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி

(ஆ) வங்கி அறிக்கை

(இ) சில்லறை ரொக்க ஏடு

(ஈ) ரொக்க ஏடு

A bank reconciliation statement is prepared with the help of :

(a) Bank statement and Bank column of the cash book

(b) Bank statement

(c) Petty cash book

(d) Cash book

12. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது :

(அ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில்

(ஆ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்

(இ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்

(ஈ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்

In Double entry system of book-keeping every business transaction affects :

(a) Two sides of the same account

(b) Minimum two accounts

(c) Minimum three accounts

(d) Same account on two different dates

13. பின்வரும் எந்த சொத்துகளுக்கு போக்கெழுதுதல் முறை பயன்படுகிறது ?

(அ) மரக்கட்டைகள் (ஆ) நிலக்கரி

(இ) கனிமச் சுரங்கங்கள் (ஈ) காப்புரிமை

For which of the following assets, amortization method is adopted ?

(a) timber (b) coal

(c) mineral deposits (d) patents

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

14. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நீண்ட-காலக் கடன் தொகை :

(அ) வருவாயின வரவுகள் (ஆ) முதலினச் செலவுகள்

(இ) முதலின வரவுகள் (ஈ) வருவாயினச் செலவுகள்

Amount received from IDBI as a long-term loan for augmenting working capital :

(a) Revenue receipts (b) Capital expenditures

(c) Capital receipt (d) Revenue expenditures

15. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது ?

(அ) அறைகலன் (ஆ) ரொக்கம்

(இ) முன்கூட்டிச் செலுத்திய செலவு (ஈ) சரக்கிருப்பு

Current assets does not include :

(a) furniture (b) cash

(c) prepaid expenses (d) stock

16. இருப்பு நிலைக் குறிப்பு, வணிகத்தின் _____ காண்பிக்கிறது.

(அ) விற்பனையை (ஆ) இலாபத்தினை

(இ) கொள்முதலை (ஈ) நிதி நிலையினை

Balance sheet shows the _____ of the business.

(a) Sales (b) Profitability

(c) Purchases (d) Financial position

17. உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும் ?

(அ) கடன் பக்கத்தில் (ஆ) வியாபாரக் கணக்கில்

(இ) சொத்து பக்கத்தில் (ஈ) இலாப நட்டக் கணக்கில்

Carriage inwards will be shown :

(a) On the liabilities side (b) In the trading account

(c) On the assets side (d) In the profit and loss account

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

18. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது :

(அ) அடக்க விலை அல்லது சந்தைவிலை இதில் எது அதிகமோ அந்த விலையில்

(ஆ) அடக்க விலையில்

(இ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

(ஈ) சந்தை விலையில்

Closing stock is valued at :

(a) Cost price or market price whichever is higher

(b) Cost price

(c) Cost price or net realisable value whichever is lower

(d) Market price

19. நிகர லாபம் :

(அ) எடுப்புக்கள் கணக்கில் பற்று வைக்கப்படும்

(ஆ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்

(இ) எடுப்புக்கள் கணக்கில் வரவு வைக்கப்படும்

(ஈ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

Net Profit is :

(a) Debited to Drawings Account

(b) Debited to Capital Account

(c) Credited to Drawings Account

(d) Credited to Capital Account

20. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்றானது :

(அ) பலதுறைப் புலமை

(ஆ) கணினி அமைப்பு செயலிழத்தல்

(இ) தேக்ககம்

(ஈ) துல்லியத் தன்மை

One of the limitations of computerised accounting system is :

(a) Versatility

(b) System failure

(c) Storage

(d) Accuracy

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

21. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.

List any two functions of Accounting.

22. நிலைத் தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.

Write a brief note on "Consistency" assumption.

23. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன ?

What are source documents ?

24. வரவு இருப்பு என்றால் என்ன ?

What is credit balance ?

25. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை ?

What are the different types of cash book ?

26. பகுதி விடுபிழை என்றால் என்ன ?

What is meant by error of Partial Omission ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

27. பின்வரும் செலவினங்கள் எவ்வகை எனக் காண்க.

(i) உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க சேர்க்கப்பட்ட கூடுதல் இயந்திரத்தின் மதிப்பு ₹ 2,000

(ii) கவனக் குறைவால் ஏற்பட்ட பழுதினைச் சரி செய்ய ₹ 1,200 செலவழிக்கப்-பட்டது.

Find out the type of expenditure.

(i) ₹ 2,000 for addition of machine to double the output.

(ii) ₹ 1,200 for repairs of machine necessitated by negligence.

28. கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன ?
What is outstanding expense ?

29. கணினி என்றால் என்ன ?
What is a computer ?

30. வங்கிச் சரிகட்டும் பட்டியலின் தேவையினைக் குறிப்பிடுக.
State the need for bank reconciliation statement.

பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

31. கணக்கியலின் முக்கியத்துவம் எவையேனும் மூன்றினை விளக்குக.
Discuss in detail any three importance of accounting.

32. பேரேட்டுக் கணக்கின் இருப்புக் கட்டுதலின் வழிமுறையை விளக்குக.
Explain the procedure for balancing a Ledger Account.

33. இருப்பாய்வு தயாரிப்பதின் நோக்கங்கள் எவையேனும் மூன்றினை எழுதுக.
Write any three objectives of preparing trial balance.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

34. பின்வரும் நடவடிக்கைகளை சாந்தி அறைகலன் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2017 மார்ச் 1	மதுரை, மோகன் அறைகலன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது.
	20 நாற்காலிகள் ஒன்று ₹ 450 வீதம்
	2 மேசைகள் ஒன்று ₹ 1,000 வீதம்
	இதில் 10% வியாபாரத் தள்ளுபடி நீக்குக
மார்ச் 6	வேலூர், வெல்கம் அறைகலன் நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
	2 அலமாரிகள் ஒன்று ₹ 2,000 வீதம்.
மார்ச் 7	இராயப்பேட்டை, இரமேஷ் நிறுவனத்திடமிருந்து வாங்கியது
	2 மர நாற்காலிகள் ஒன்று ₹ 500 வீதம்
	10 சுழல் நாற்காலிகள் ஒன்று ₹ 200 வீதம்
	இதற்கு, வண்டிக் கட்டணம் மற்றும் அனுப்புகைச் செலவுகள் ₹ 150
மார்ச் 20	அடையாறு, ஆனந்தன் நிறுவனத்திடமிருந்து அலுவலகப் பயன்பாட்டிற்காக இரண்டு கணிப்பொறிகள் ஒன்று ₹ 15,550 வீதம் கடனுக்கு வாங்கியது.
மார்ச் 21	காரைக்கால், கமால் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. 10 நாற்காலிகள் ஒன்று ₹ 750 வீதம்
	15 இரும்பு அலமாரிகள் ஒன்று ₹ 1,500 வீதம். இதற்கு கட்டுமம் மற்றும் அனுப்புகைச் செலவுகள் ₹ 250
	இதில் 10% வியாபாரத் தள்ளுபடி நீக்குக.
மார்ச் 25	சென்னை ஜெமினி விற்பனையகத்திடமிருந்து 2 தட்டச்சு இயந்திரங்கள் ஒன்று ₹ 7,750 வீதம் அலுவலகப் பணிக்கென வாங்கப்பட்டது.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

Record the following transactions in the purchase book of Shanthi Furniture Mart.

2017 March 1	Purchased from Mohan Furniture Mart, Madurai
	20 chairs @ ₹ 450 each
	2 tables @ ₹ 1,000 each
	Less : Trade discount @ 10%
March 6	Purchased for cash from Welcome furniture, Vellore.
	2 almirahs @ ₹ 2,000 each.
March 7	Bought from Ramesh & Co., Royapettah
	2 wooden chairs @ ₹ 500 each
	10 rolling chairs @ ₹ 200 each
	Delivery charges and cartage ₹ 150.
March 20	Purchased 2 computers for office use from Anandan & Co., Adyar on credit for ₹ 15,550 each
March 21	Purchased from Kamal & Co., Karaikkal
	10 chairs @ ₹ 750 each
	15 steel cabinets @ ₹ 1,500 each
	Packing and delivery charges ₹ 250
	Less : Trade Discount @ 10%
March 25	Purchased from Jemini & Sons, Chennai
	2 typewriters @ ₹ 7,750 for office use.

35. இருப்பாய்வு வெளிப்படுத்தாத பிழைகள் யாவை ?

What are the errors not disclosed by Trial Balance ?

36. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

What are the causes for depreciation ?

37. முதலினச் செலவின் இயல்புகள் யாவை ?

What are the features of capital expenditure ?

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

38. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து சரோஜா நிறுவனத்தின் ஏடுகளில் 2017, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்கச் சரக்கிருப்பு	16,500	உள்தூக்குக் கூலி	1,200
கொள்முதல்	45,000	கூலி	4,800
விற்பனை	72,000	எரிபொருள் மற்றும் மின்சக்தி	3,200
கொள்முதல் திருப்பம்	500	இறுதிச் சரக்கிருப்பு	18,000
விற்பனைத் திருப்பம்	1,500		

From the following balances extracted from the books of M/s Saroja and Sons, prepare trading account for the year ended 31st March 2017.

Particulars	₹	Particulars	₹
Opening stock	16,500	Carriage inwards	1,200
Purchases	45,000	Wages	4,800
Sales	72,000	Fuel and Power	3,200
Purchases returns	500	Closing stock	18,000
Sales returns	1,500		

39. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.
Mention any three limitations of Computerised accounting system.

40. கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் படித்து இரட்டைப்பதிவு விதிகளின்படி எக்கணக்கு பற்று மற்றும் வரவு வைக்கப்படும் என்று கண்டறிக.

(a) சுரேஷிற்கு காசோலை மூலம் செலுத்தியது ₹ 5,000

(b) சரக்கு, ரொக்கத்திற்கு வாங்கியது ₹ 2,500

(c) மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தியது ₹ 1,500

From the following business transactions by applying the rules of double entry system find out which account has to be debited and credited ?

(a) Paid Suresh ₹ 5,000 by cheque

(b) Stock purchased for cash ₹ 2,500

(c) Paid for Electric charges by cash ₹ 1,500

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Note : Answer **all** the questions.

41. (அ) குறிப்பேட்டுப் பதிவுகளை எவ்வாறு வகைப்படுத்துவாய் ? விளக்குக.

அல்லது

(ஆ) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தரவும்.

(i) இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000

(ii) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 150

(iii) காப்பீடு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 450

(iv) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹ 20,000

(v) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ₹ 1,000

(a) Explain the different types of journal entries.

OR

(b) Pass adjusting entries for the following :

(i) The closing stock was valued at ₹ 5,000

(ii) Outstanding salaries ₹ 150

(iii) Insurance prepaid ₹ 450

(iv) ₹ 20,000 was received in advance for commission

(v) Accrued interest on investments is ₹ 1,000

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

42. (அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

அல்லது

(ஆ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை அஸ்வின் என்பவரின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2017

அக்டோபர்		₹
1.	ரொக்க இருப்பு	37,500
3.	ரொக்க விற்பனை	33,000
7.	வேலனுக்கு செலுத்திய ரொக்கம் ₹ 15,850 அவர் அனுமதித்த தள்ளுபடி	150
13.	பெருமாள் என்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்கு	19,200
15.	சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்தது	4,800
16.	சுப்பிரமணியனிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கியது	14,300
22.	ரொக்கம் வங்கியில் செலுத்தியது	22,700
25.	பெருமாளிடம் ரொக்கம் பெற்று அவர் கணக்கைத் தீர்த்துக் கொண்டது	19,000
26.	அலுவலக செலவிற்காக காசோலை மூலம் ரொக்கம் எடுத்தது	17,500
27.	கோபால கிருஷ்ணனுக்கு ரொக்கம் செலுத்தியது	2,950
	அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி	50

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Distinguish between journal and ledger.

OR

(b) Enter the following transactions in Ashwin's Cash book with discount and Cash columns.

2017 Oct		₹
1.	Cash balance	37,500
3.	Cash sales	33,000
7.	Paid to Velan ₹ 15,850 and discount allowed by him	150
13.	Sold goods to Perumal on credit	19,200
15.	Cash withdrawn for personal expenses	4,800
16.	Purchased goods from Subramanian on credit	14,300
22.	Paid to Bank	22,700
25.	Cash received from Perumal in full settlement	19,000
26.	Draw a cheque for office use	17,500
27.	Paid cash to Gopalakrishnan	2,950
	Discount received from him	50

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

43. (அ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு மற்றும் பெயரளவுக் கணக்கு என்று வகைப்படுத்துக.

(i) முதல் (ii) கட்டிடம்

(iii) உள் ஏற்றிச்செல் செலவு (iv) வங்கி

(v) சந்துரு (vi) கொடுபட வேண்டிய கூலி

(vii) ரொக்கம் (viii) கழிவு பெற்றது

(ix) கொள்முதல்

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையைக் காணவும்.

விவரம்	₹
தொடக்கச் சரக்கிருப்பு	20,000
நிகர கொள்முதல்	70,000
நேரடிச் செலவுகள்	10,000
இறுதிச் சரக்கிருப்பு	30,000
மொத்த இலாப விகிதம் (விற்பனையில்)	20%

(a) Classify the following into personal, real and nominal accounts :

(i) Capital (ii) Building

(iii) Carriage inwards (iv) Bank

(v) Chandru (vi) Outstanding wages

(vii) Cash (viii) Commission received

(ix) Purchases

OR

(b) Find out the amount of Sales from the following information :

Particulars	₹
Opening stock	20,000
Purchases less returns	70,000
Direct expenses	10,000
Closing stock	30,000
Gross Profit Margin (on sales)	20%

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

44. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு நாளந்தா புத்தகக் கடையின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்யவும்.

2017

டிசம்பர் 1	உமாதேவி டிரேடர்சிலிருந்து கடனுக்கு வாங்கியது.
	ஒன்று ₹ 80 வீதம் 100 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள்.
	ஒன்று ₹ 150 வீதம் 100 கணக்குப் பதிவியல் புத்தகங்கள்.
டிசம்பர் 7	ஸ்ரீதேவி & கோ -விற்கு கடனுக்கு விற்றது
	ஒன்று ₹ 90 வீதம் 240 வணிகப்புள்ளியியல் புத்தகங்கள்.
	ஒன்று ₹ 170 வீதம் 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்.
டிசம்பர் 10	சுபா & கோ -விடமிருந்து வாங்கியது.
	ஒன்று ₹ 80 வீதம் 40 பொருளாதாரப் புத்தகங்கள்.
	கழிக்க : வியாபாரத் தள்ளுபடி 15%
டிசம்பர் 15	சேதமடைந்திருந்த 10 கணக்குப்பதிவியல்
	புத்தகங்கள் உமாதேவி டிரேடர்சிற்கு திருப்பப்பட்டது.
	இதற்கு பணம் பெறப்படவில்லை.
டிசம்பர் 18	குப்தா பிரதர்சிற்கு கடனுக்கு விற்றது.
	ஒன்று ₹ 95 வீதம் 200 பொருளாதாரப் புத்தகங்கள்
டிசம்பர் 26	சுபா & கோவிற்கு 6 பொருளாதாரப் புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

அல்லது

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(ஆ) முதலின வரவு மற்றும் வருவாயின வரவுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் இரண்டினை எடுத்துக்காட்டுகளுடன் எழுதவும்.

(a) From the following information, prepare Purchase book and Sales book for Nalanda Book Stores.

2017

Dec 1 Bought from Uma Devi Traders on credit

100 Copies Business Statistics Books @ ₹ 80 each

100 Copies Accountancy Books @ ₹ 150 each

Dec 7 Sold to Sridevi & Co., on credit

240 Copies Business Statistics books @ ₹ 90 each

250 Copies Accountancy books @ ₹ 170 each

Dec 10 Bought from Subha & Co.,

40 Copies Economics books @ ₹ 80 each

Less : 15% Trade Discount

Dec 15 Returned to Uma Devi Traders 10 copies of damaged accountancy book for which cash is not received.

Dec 18 Sold to Gupta Bros., on credit

200 Copies of Economics books @ ₹ 95 each

Dec 26 Returned 6 copies of Economics books to Subha & Co.,

OR

(b) Distinguish between Capital and Revenue Receipts and give two examples for each.

45. (அ) இரட்டைப் பதிவு முறை வரைவிலக்கணம் தந்து அதன் நன்மைகளை விவரிக்கவும்.

அல்லது

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(ஆ) நடேசனின் இருப்புகளிலிருந்து 2017, டிசம்பர் 31 -ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

விவரம்	பற்று ₹	வரவு ₹
பொறி மற்றும் இயந்திரம்	8,00,000	
நிலம் மற்றும் கட்டடம்	6,00,000	
அறைகலன்	1,50,000	
கைரொக்கம்	20,000	
வங்கி மேல்வரைப்பற்று		1,80,000
கடனாளிகள் மற்றும் கடனீந்தோர்	4,20,000	3,00,000
இறுதிச் சரக்கிருப்பு	4,00,000	
குறுகிய கால முதலீடுகள்	80,000	
முதல்		15,00,000
எடுப்புகள்	1,30,000	
நிகர இலாபம்		6,20,000
	26,00,000	26,00,000

(a) Define Double Entry System and explain it's Advantages.

OR

(b) From the following balances of Natesan, prepare balance sheet as on 31st December, 2017.

Particulars	Dr. ₹	Cr. ₹
Plant and Machinery	8,00,000	
Land and Building	6,00,000	
Furniture	1,50,000	
Cash in hand	20,000	
Bank overdraft		1,80,000
Debtors and creditors	4,20,000	3,00,000
Closing stock	4,00,000	
Investments (short-term)	80,000	
Capital		15,00,000
Drawings	1,30,000	
Net profit		6,20,000
	26,00,000	26,00,000

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

46. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து இம்மானுவேல் அறைகலன் நிறுவனத்தின் 2017 ஜூன் மாதத்திற்கான கொள்முதல் ஏடு மற்றும் கொள்முதல் திருப்ப ஏடு தயார் செய்க.

2017

ஜூன் 1 பாலு நிறுவனத்திடம் ஒன்று ₹ 150 வீதம் 20 நாற்காலிகள் கடனுக்கு வாங்கியது.

ஜூன் 13 சுபாஷிடமிருந்து கடனுக்கு வாங்கியது.

ஒன்று ₹ 3,100 வீதம் 2 அலமாரிகள்.

ஒன்று ₹ 1,500 வீதம் 10 மேசைகள்.

ஒன்று ₹ 200 வீதம் 15 நாற்காலிகள்.

கழிக்க : 10% வியாபாரத் தள்ளுபடி(அனைத்து பொருட்களுக்கும்)

கூட்டுக : ₹ 220 சரக்கு தூக்குக்கூலி

ஜூன் 21 பழுதடைந்து இருந்ததால் பாலு நிறுவனத்திற்கு 2 நாற்காலிகள் திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை.

ஜூன் 24 சன்ரைஸ் அறைகலன் நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது.

ஒன்று ₹ 1,300 வீதம் 25 அலமாரிகள்.

ஜூன் 27 மௌலி டிரேடர்சிடம் கடனுக்கு வாங்கியது.

ஒன்று ₹ 3,275 வீதம், 10 நிர்வாக மேசைகள்.

ஜூன் 29 பழுதடைந்த மூன்று அலமாரிகள் சன்ரைஸ் அறைகலன் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்பட வில்லை.

அல்லது

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து அகல்யாவின் 2016. டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார கணக்கைத் தயாரிக்கவும்.

பற்று இருப்பு	₹	வரவு இருப்பு	₹
தொடக்கச் சரக்கிருப்பு	80,000	கொள்முதல் திருப்பம்	10,000
கொள்முதல்	8,60,000	விற்பனை திருப்பம்	3,16,000
உள் ஏற்றிச் செல் செலவு	52,000	கொள்முதல் மீதான இறக்குமதி வரி	30,000
கூலி	24,000	விற்பனை	14,40,000

சரிக்கட்டுதல்கள் :

(i) இறுதிச் சரக்கிருப்பு ₹ 1,00,000

(ii) கொடுபட வேண்டிய கூலி ₹ 12,000

(iii) உள் ஏற்றிச் செல் செலவு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 5,000

(a) From the following information, prepare Purchase day book and Purchase returns book for the month of June, 2017 of Emmanuel Furniture mart.

2017

June 1 Purchased from Balu Traders
20 chairs @ ₹ 150 each on credit

June 13 Bought from Subash & Co., on credit
2 Almirahs @ ₹ 3,100 each
10 tables @ ₹ 1,500 each
15 chairs @ ₹ 200 each
Less : 10% Trade discount on all items
Add : Freight charges ₹ 220

June 21 Returned 2 damaged chairs to Balu Traders and cash not received.

June 24 Purchased from Sunrise Furniture Mart on credit
25 Almirahs @ ₹ 1,300 each

June 27 Purchased from Mouli traders on credit
10 executive tables @ ₹ 3,275 each

June 29 Returned 3 Almirahs to Sunrise furniture mart and cash not received.

OR

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(b) Prepare trading account of Akalya for the year ending 31st December, 2016 from the following information.

Debit balance	₹	Credit balance	₹
Opening stock	80,000	Purchase returns	10,000
Purchases	8,60,000	Sales returns	3,16,000
Freight inwards	52,000	Import duty on purchases	30,000
Wages	24,000	Sales	14,40,000

Adjustments :

(i) Closing stock ₹ 1,00,000

(ii) Wages outstanding ₹ 12,000

(iii) Freight inwards paid in advance ₹ 5,000

47. (அ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

அல்லது

(ஆ) (1) கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

(i) நிலைச் சொத்து வாங்குவதற்காக இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹ 10,000.

(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை.

(iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு.

(iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.

(2) முதலின மற்றும் வருவாயினச் செலவுகளைத் தீர்மானிக்கும் கருதுகோள்கள் யாவை ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Bring out the differences between Cash discount and Trade discount.

OR

(b) (1) Classify the following expenditures and receipts as Capital or Revenue :

(i) ₹ 10,000 spent as travelling expenses of the Directors on trips abroad for the purchase of Fixed assets.

(ii) Amount received from trade receivables during the year.

(iii) Amount spent on demolition of building to construct a large building on the same site.

(iv) Insurance claim received on account of a machinery damaged by fire.

(2) What are the considerations to differentiate between Capital and Revenue expenditures ?

- o O o -

tnkalvi.online

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-september-2021-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online